பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 09 2026 FRIDAY 6 30 PM

**வணக்கம் - மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 36 ஆயிரத்து 754 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ஊழலற்ற நிர்வாகத்தை த.வெ.க. அரசு உறுதி செய்துள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

- அரசு பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை நாள்தோறும் கண்காணிக்க த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

- ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் குல்வீர் சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சர்வதேச அளவில் பொருளாதாரம் சரிவை சந்தித்து வந்த போதிலும், இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியை கண்டு வருவதாக கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி எட்டு சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>>><<<<<<

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 36 ஆயிரத்து 754 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், 2 லட்சத்து 58 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், 15 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14 முக்கிய துறைகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவதில் த.வெ.க. அரசு உறுதியுடன் உள்ளதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி, அந்த தொகுதியில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மாநிலத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

தொழிலதிபர் திரு. வீரமணிக்கு எதிரான பாலியல் வழக்கினை மறைக்க திமுக அரசு முயன்றதாக அவர் குற்றம் சாட்டினார்.

இருப்பினும், த.வெ.க. அரசு திரு. வீரமணியை கைது செய்து சிறைக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக திமுகவும், அஇஅதிமுகவும் கருத்து தெரிவிக்காமல் இருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பிய திரு. விஜய், இவ்விரு கட்சிகளும் ரகசியமாக கூட்டணி வைத்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

>>>>>>><<<<<<

அரசு பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை நாள்தோறும் தீவிரமாக கண்காணிக்க, உரிய நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், விளம்பரங்களுக்கு மட்டுமே த.வெ.க. அரசு முக்கியத்துவம் கொடுப்பதாக குற்றம் சாட்டியுள்ளது.

வரும் காலங்களில் விளம்பரங்களை தவிர்த்து, மாணவர்களின் நலனில் த.வெ.க. அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் திமுக அந்த அறிக்கையில் கோரியுள்ளது.

>>>>>>><<<<<<

வண்டலூர் பாலியல் வழக்கை மூடிமறைக்க த.வெ.க. அரசு முயற்சிப்பதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று காவல்துறையினர் அறிக்கை வெளியிட்டதை சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியரை பணியிட மாற்றம் செய்தது ஏன் என்றும் அஇஅதிமுக கேள்வி எழுப்பியுள்ளது.

>>>>>>><<<<<<

வீரமணி வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வழக்கு தொடர்பாக காங்கிரஸ் நிர்வாகி திரு. ரஞ்சன் குமார் உட்பட அனைவரிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

தவறு செய்தவர்களுக்கு கடுமையான தண்டனையை பெற்றுத் தர தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

சென்னை மழைநீர் வடிகால் பணிகளை த.வெ.க. அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு ஒருமாதம் கூட இல்லாத நிலையில், இப்பணிகள் முடிக்கப்படாதது கவலை அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், திருவொற்றியூர், மணலி, மாதவரம், திரு.வி.க நகர் ஆகிய பகுதிகளில் இப்பணிகள் முடிக்கப்படாமல் இருப்பதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

சர்வதேச மருந்தாளுநர் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்துவரும் மருந்தாளுநர்களின் சேவையை போற்றும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாக கோவையைச் சேர்ந்த மருந்தாளுனர் திருமதி. இந்திரா தேவி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - இந்திரா தேவி 51 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி ஆர் துரை - 40 Sec. )*

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

விழுப்புரத்தில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தீபாவளி சிறப்பு விற்பனையை அம்மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<

தென்காசி மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திரு. ஜான் லூயிஸ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<

ராணிப்பேட்டை மாவட்டம், திமிரியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில், ஊட்டச்சத்து மாதம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி. பிரியா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<

திருப்பத்தூரில் ஆதார் சேவை மையத்தை ஆட்சியர் திரு. நல்லசிவன் இன்று திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், விளையாட்டு மைதானத்தில் ராணுவத்திற்கான அக்னிவீர் ஆள்சேர்ப்பு முகாம் இன்று தொடங்கியது.

>>>>>>><<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு. அப்துல் ராசிக் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

நெல்லை மாநகராட்சியின் அவசரக் கூட்டம் மேயர் திரு. ராமகிருஷ்ணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

மதுரை மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச்சிறையில் மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் குறைதீர் கூட்டம் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி. மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் குல்வீர் சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் ஆடவர் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் குண்டு எறிதலில் Manpreet Kaur-ம், Pole Vault-ல் Baranica Elangovan-னும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் Manush Shah - Diya Chitale இணையும் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

அலைச்சறுக்கு பிரிவில் இந்தியாவின் சிவராஜ் பாபு இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 9 வெள்ளி, 12 வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் 12வது இடத்தில் உள்ளது.

>>>>>>><<<<<<

குரேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Muskaan Khan காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-14 என்ற செட்கணக்கில் சுவிட்சர்லாந்தின் Leila Zarrouk-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<

இந்தியா-பனாமா இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

>>>>>>END<<<<<<